அப்பாவின் வாழ்க்கை
ஓர் அலைக்கழியும் படகு

வேலையிடம் நதி
குடும்பம் கரை
உறவுகள் பயணிகள்

கனிகள் செய்ய
மரங்கள் படும்பாடு
கிளிகளுக்குத் தெரியாது

பசியாறும் குஞ்சுகளுக்கு
தன் தாய்க்குருவி
பறந்து சேர்த்தது புரியாது

விழுகின்ற மழைத்துளி
புற்களுக்கும் புரியும்
அது உயரப் பட்டபாடு
புரியுமோ புற்களுக்கு

என் அப்பா பட்டபாடோ
இத்தனைக்கும் மேலே

தாயின் மடியாம் அப்பா
இன்று நோயின் மடியில்

கோயில் யானை அவர்
குடை சாய்ந்து கிடக்கிறார்

மூச்சுக் குழாயில்
சில முடிச்சுக்களாம்

கரம் பிடித்து அழுகிறேன்
அப்பா  அப்பா அப்பா

இதழ் விரித்தார் அப்பா
இதமாகச் சொன்னார்

மகனே கேள்

தியாகங்கள்  பொய்
நான் சேர்த்ததெல்லாம்
என் வசதிக்காக
நான் முடித்துக்கொண்டேன்
நீ தொடரப் போகிறாய்
விருப்பப்படி அல்ல
விதிப்படி

குடும்பத்தோடு குதூகலித்தேன்
என் மகிழ்ச்சிக்காக

வாழ்க்கையில்
மூன்றாம் வகுப்பில் நான்
முதல் வகுப்பில் நீ
தியாகிப்பட்டம் வாங்க
நானே செய்த ஏற்பாடு
எல்லாம் என் சுயநலம்

இந்த அப்பா இறந்து விடுவேன்

மகனே
என்னை மற
உன்னை நினை
உயர்
உ. . . ய . . . ர்
உ. . . . ய . . . . ர்

தேசிய நாள் விழாவை
நாம் சேர்ந்து ரசிக்க விழைந்தாய்
ஓர் அந்திப் பொழுது சென்று
இரவெல்லாம் நின்று
விடிந்ததும் பெற்றேன்
முதல் சீட்டு
அது
நுழைவுச் சீட்டல்ல
நம் காதல் சாம்ராஜ்ஜியத்தின்
கடவுச் சீட்டு

தோகை மயிலைக்
காணும் போதெல்லாம்
தவித்துப் போவேன்
குவித்த தோகையை
விரிக்காதா என்று
நம் காதலை விளையாட
விலங்குத் தோட்டம் சென்றோம்
உன்னைப் பார்த்த கிறக்கத்தில்
கொண்டைப்பூ சிணுங்க
தோகை விரித்தது
அந்த சுந்தர மயில்

ஒரு தேர்வில் இருந்தேன்
உன் காதல் குறுஞ் செய்தி
என் பேசியில் வந்து வாசி என்றது
அந்தத் தேர்வில்தான்
நான் நூற்றுக்கு நூறு

ஒரு மன்மத மாலையில்
மஞ்சள் ரோஜா என்று
பூத்தொட்டி தந்தாய்

அதன் முதல் மொட்டு
முக்காடு விலக்கி
என் முகம் பார்த்துச் சிரித்தது
சரியாக என் பிறந்த நாளில்

உன் பெயரைச் சொன்னால்தான்
என் கணினி திறக்கிறது
உன் பிறந்த தேதி பதித்தால்தான்
ஏடிஎம் என்ன வேண்டு மென்கிறது

நான் முட்டையாக வந்தேன்
நீ இல்லை
புழுவாக வளர்ந்தேன்
நீ இல்லை
கூட்டுப் புழுவாகி சிறைப்பட்டேன்
அப்போதும் நீ இல்லை
வண்ணத்துப் பூச்சி வடிவானேன்
வண்ணச் சிறகுகளாய் வந்தாய்
இது போதும் எனக்கு
இறக்கும்வரை

இந்திர லோகமே மேடையில்
இறங்கி யிருந்தது

திரைவானத் தாரகைகள்
தரை யிறங்கி வந்தனர்

இருநூறு வெள்ளி சீட்டுக்கு
முன்னூறு தரவும் சம்மதமாம்

திரைக் கலைஞர்களின்
கலைவிழா
பிதுங்கி வழிந்தது
அந்த பிரமாண்ட அரங்கம்

ஆம்பல்களும் அல்லிகளும்
ஆடை கட்டி ஆடின

சேலைக் குயில்கள்
இன்னிசைத்தன

இசைகளின் முழக்கத்தில்
இருக்கைகள் அதிர்ந்தன

காற்றுவெளியைக்
கூறுபோட்டன
வண்ண ஒளிக் கற்றைகள்

மேய்ந்துகொண்டே இருந்தது
ஒட்டைச் சிவிங்கி காமிராக்கள்

மூன்று மணி நேரம்
மொத்தமாக முடிந்தது

வங்கக் கடல் வழிந்து
வாய்க்காலாய் நெளிந்தது

நெளிந்து சென்ற வழியே

வித்திலேயே
விழிகளை இழந்த கலைஞன்
இருதயத் துடிப்பையே
இசையாக்கிப் பாடினான்
அவன் ஆலாபனைக்கு
அவன் ஆர்மோனியம்
ஆனந்தக் கண்ணீர் வடித்தது
இறைவனே இறங்கி வந்து
கரைந்து நின்றான்

வெள்ளிக்காக
ஒரு வெள்ளைத் துணி
விரித்துக் கிடந்தது
அவன் முன்னே

நகரந்து கொண்டே சென்றது
ரசிகர் கூட்டம்
அந்த வெள்ளைத் துணி மட்டும்
கடைசிவரை விதவையாகவே

பெயரில்லா மனிதர்கள்
சாத்தியம்தான்
சாத்தியமே இல்லை
பேசி இலா மனிதர்கள்

பேசுபவன் வாழ்க்கைத் தரம்
அவன் பேசியிலே தெரியும்

வறுமைக் கோட்டில்
வாழ்பவனாய் எனை
வகைப்படுத்தியது என் பேசி
புதிதாக ஒன்றைத் தேடினேன்

வனப்பிலே வானத்துண்டு
வண்ணத்திலே வானவில்
கணினிக்கும் பாடம் சொல்லும்
கைத் தொலைபேசி

ஆசை ஆசை
கொள்ளை ஆசை
அந்த வானத்துண்டை
எப்படியும் வாங்கிவிட ஆசை

என் ஆசை வானில்
அன்றுதான் பௌர்ணமி
கைக்கு வந்தது
அந்த கைத் தொலைபேசி

ஆம்ஸ்ட்ராங் ஆனேன்
அம்புலி அளந்தேன்
உள்ளங்கைக்குள்
உலகைப் பொத்தினேன்

அடுத்த நாளே

*தீப்பொறி விழுந்தது*
*என் தீபாவளிச் சட்டையில்*
*கண்ணான பேசி*
*தண்ணீரில் விழுந்தது*
*மொத்த இயக்கமும்*
*மூர்ச்சையானது*
*ஈரம் கண்டதால்*
*இழப்பீடு இல்லையாம்*

*அந்தியில் பூத்த*
*காளானானது*
*என் ஆசைகளெல்லாம்*

வெல்லப்படும் ஆசையெலாம்
கொல்லப்படத்தானோ

பாரதி
நீ தமிழ்த் தேரின்
சாரதி

விண்மீன்கள் நடுவே
வால்மீனாய்
வலம் வந்தவன் நீ

தரிசு நிலத்தில்
தமிழ்த் தென்னை நட்டு
தண்ணீர் விட்டவன் நீ

வானத்தை
உன் நூல்களால்
நெய்து போட்டவன் நீ

அச்சத்தை பயத்தை
அருவருத்தவன் நீ

இடியே விழுந்த போதும்
இயல்பாய் இருந்தவன் நீ

நலிவை வறுமையை
நலமா என்றவன் நீ

ஏழை ஒருவருக்கு
எழுத்தறிவிக்க
இரக்கவும் துணிந்தவன் நீ

ஒரு செப்டம்பர் திங்களில்தான்
உன் சப்த நாடி அழுங்கியது

விழாத உன் புகழ் சொல்ல
விழா எடுக்க விழைந்தோம்
உன் நினைவு நாளில்

ஊடகங்கள் அனைத்தும்
உன்னையே பேசின

அன்றுதான்
ஆபரணக்கடை திறக்க திரை
ஆரணங்கு வந்தார்

அங்கோ சரியான கூட்டம்
இங்கோ சராசரிக் கூட்டம்

எங்கே தவறு

பொறியாளன் தவறு செய்ய
கொத்தனார் எப்படி
குற்றவாளி யாவார்

பாரதீ
அந்த விடலைப் பிள்ளைகளுக்கு
உன் விரல் பிடித்து நடக்க
நாங்கள் சொல்லித் தரவில்லை

இயற்கை செய்தது
ஓர் இந்து மகாத் தவறுதான்

யானையால்
துவைக்கப்பட வேண்டியவர்கள்
நாங்கள்தான் பாரதீ
நாங்கள்தான்